ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1907/19 - 2015 මාර්තු මස 25 වැනි බදාදා - 2015.03.25

*1907/19 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2015, மாச்சு மாதம் 26 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 04 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழும் 2015.01.22 ஆந் திகதிய 1898/43 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரிசி சம்பந்தமான உத்தரவு (எச். எஸ். தலைப்பு இல. 10.06) 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2015, மாச்சு 25.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 10.06 | 1006.10 | உமியுடன் கூடிய அரிசி (நெல் அல்லது குற்றப் பெறாத) | ரூபா 40.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1006.20 | உமி அகற்றிய அரிசி (தவிடு நீக்காத அரிசி) | ரூபா 40.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1006.30 | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட அரிசி, மெருகூட்டப்பட்டவை, பள பளப்பாக்கப்பட்டவை அல்லது பளபளப்பாக்கப் படாதவை | ரூபா 40.00 கி.கிராம் ஒன்றுக்கு |
| | | 1006.40 | உடைத்த அரிசி | ரூபா 40.00 கி.கிராம் ஒன்றுக்கு |

*4- 334*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.